1990 ஆகஸ்ட் 21]

பலயிடங்களில் புல திட்டங்களை வேளாண்மைத் துறை, கிரவுண்டு வாட்டர் துறை போன்றவை மூலமாக இதை அணுகலாம் என்பது என்னுடைய கருத்து.

திரு. டி.சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வைச் செய்யும்போது பி.சி. ரேஷியோவை உபயோகம் செய்கிறார்கள். தளித் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாகும். அந்த இடத்தில் இந்த பி. சி. ரேஷியோவை கொண்டு வராமல்—ஓசூர், தென்கனிகோட்டை போன்ற இடங்களில் இந்த பி. சி. ரேஷியோவை கொண்டு வராமல்—அதற்கு எக்சம்சன் கொடுத்து உதவி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலுகை தருவது அணைக்கட்டுவதில் இருக்காது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரின் ஆர்வத்தை கணக்கில் கொண்டு நான் ஒரு முறை உங்கள் பகுதிக்கு வந்து பார்வையிட்டு முடிவு எடுக்கலாம்.

பாலேஸ்வரம் நீர்த்தேக்கத் திட்டம்.

** 9418* திரு. கே. சுந்தர் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை—அண்ணா மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தில் பாலேஸ்வரம் நீர்த்தேக்கத் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

சித்த மருத்துவக் கல்லூரியும், ஆராய்ச்சி நிலையமும் ஏற்படுத்துதல்.

**5204* திரு. செங்கைசிவம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

சென்னை, கோவை ஆகிய இடங்களில் சித்த மருத்துவக் கல்லூரியும், ஆராய்ச்சி நிலையமும் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

சென்னை அருகில் செங்கை அண்ணா மாவட்டம், பனப்பாக்கம் கிராமத்தில் சித்த மருத்துவக் கல்லூரி உள்ளிட்ட தேசிய சித்த ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளது.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள ஆயிரக்கணக்கான ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போது 220 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவு இருக்கிறது. மீதியுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில், மாவட்ட தாலுக்கா மருத்துவமனைகளில் இந்த சித்த மருத்துவப் பிரிவை ஏற்படுத்தி போதுமான டாக்டர்களை உருவாக்கி சென்னையிலும், கோவையிலும் வருகிற ஆண்டிலாவது இந்தக் கல்லூரிகளை உருவாக்கித் தந்திட அரசுக்கு எண்ணம் உண்டா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற சித்த மருத்துவக் கல்லூரிகளை மேலும் விரிவுபடுத்துகின்ற நோக்கத்துடன்தான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவை சரியாக, செம்மையாக செயல்பட வேண்டும் என்றும், பல்வேறு மருத்துவர்களை உருவாக்கவும் இந்த அரசு இப்போது கருத்தில் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் இப்போது பதிலில் சொல்லப்பட்டதுபோல் பனப்பாக்கம் கிராமத்தில் ஒரு ஆராய்ச்சி நிலையம் உருவாக்கப்பட இருக்கிறது. அந்த சித்த மருத்துவக் கல்லூரியில் ஆராய்ச்சிப் பாடங்களை அரசு உருவாக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனப்பாக்கத்தில் ஒரு கல்லூரியும், ஆராய்ச்சி மையமும் அமைப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தற்போது அண்ணா நகரில் மத்திய அரசால் அமைக்கப்பட்டு இருக்கிற ஆராய்ச்சிப் பிரிவில் 6 வகையான நோய்களுக்கு ஆராய்ச்சி செய்ய மருத்துவ வசதி

செய்யப்பட்டிருக்கிறது. பனப்பாக்கத்தில் ஆரம்பிக்கின்ற அந்த ஆராய்ச்சி நிலையத்தில் எல்லா வகையான வியாதிகளுக்கும் மருந்துகளை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை உரு வாக்கித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தேசீய சித்த ஆராய்ச்சி நிலையமாக உருவாக்கப்படும். இதற்கு மத்திய அரசு உதவியும் கிடைக்கிறது. மத்திய அரசு உதவியாக மூன்றில் இரண்டு பங்கும், மாநில அரசு உதவியாக மூன்றில் ஒரு பங்கும் செலவிட இருக்கிறது. மேலும் சித்த ஆராய்ச்சி நிலையத்தில் சித்த பட்டப் படிப்பு கல்லூரியும், 11 சித்த மேற்பட்டப் படிப்புத் துறையும், சுமார் 500 சித்த மருத்துவப் பிரிவை உண்டாக்கும் திட்டமும் மற்றும் பிற ஆராய்ச்சிப் பிரிவுகளும் அமைக்கப்படும்.

விபத்தில் இறந்தவர்களின் உறுப்புகளை மாற்று உறுப்புகளாகப் பொருத்தும் சட்டம்

*6198 திரு. சி. கோவிந்தராஜன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விபத்தில் இறந்தவர்களின் உறுப்புகளை மாற்று உறுப்பு களாகப் பொருத்தும் (Cadavar Organ of Transplantation) சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் ஏதும் இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இப்படிப்பட்ட சட்டம் தமிழ்நாட்டிலும், மகாராஷ் டிரத்திலும் கொண்டு வரப்பட்டு ஏதோ சில சட்டச் சிக்கல் காரணமாக இது அமல் செய்யப்படாமல் இருக்கிறது என்ற ஒரு செய்தி கிடைத்து இருக்கிறது. இந்த மனித உறுப்புகள் குறிப்பாக சிறுநீரகம், இருதயம், ஈரல் போன்றவைகளை உடனே பொருத்துவதால் பல்வேறு வியாதியஸ்தர்களை உயிர் இழக்கும் ஆபத்திலிருந்து மீட்கும் நிலை இருப்பதால் கிட்டத்தட்ட அதற்கு உதவி செய்யும் அந்த மருத்துவச் சட்டம் இங்கே வந்திருக்கிறது. சட்டச் சிக்கல் காரணமாக அதை அமல் செய்யாத காரணத்தால் இங்கே சென்னையில் குறிப்பாக சிறுநீரகம் ஏராளமாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS